குழந்தைகளுக்கு வேதாகமம்
வழங்குபவர்

# தானியேலும் இரகசிய சொப்பனமும்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Jonathan Hay

தழுவியவர்: Mary-Anne S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

ராஜா நேபுகாத்நேச்சார் ஒரு சொப்பனம் கண்டான், அது அவனை மிகவும் கலங்க செய்தது, தேவனுடைய வல்லமையினாலே, ராஜாவினுடைய சொப்பனத்திற்கு தானியேலால் அர்த்தம் சொல்ல முடிந்தது.





தானியேல் முதலாவது செய்தது என்னவென்றால் சொப்பனத்தை விவரித்தான். "நீர் ஒரு பெரிய சிலையை கண்டீர். அது பயங்கரமாயிருந்தது!"

"அந்தச்சிலையின் தலை பசும் பொன்னாயிருந்தது," தானியேல் தொடர்ந்தான்.



"அதின் மார்பும்
அதின் புயங்களும்
வெள்ளியினால்
செய்யப்பட்டிருந்தது."



"அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலத்தால்
செய்யப்பட்டிருந்தது."



"அதின் கால்கள் இரும்பிலும், அதின் பாதங்கள் பாதி இரும்பிலும், பாதி களிமண்ணினாலும் செய்யப்பட்டிருந்தது."



தானியேல் சிலையை விவரித்த பின்பு, ராஜாவினிடத்தில் மீதி சொப்பனத்தையும் சொன்னான்.



"நீர் பார்த்துக்கொண்டிருக்கும் போது கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல்லைக் கண்டீர்," என்று தானியேல் ராஜாவிடம் சொன்னான்.



"அந்தக் கல் பாதங்களின், உருவத்தின் இரும்பையும், களிமண்ணையும் நொறுக்கி, அதை துண்டு, துண்டாக உடைத்துப்போட்டது."



"பின்பு அந்த சிலையானது சாம்பலாக
நொறுக்கப்பட்டு, பறந்து போயிற்று."
தானியேல் மவுனமாயிருந்தான்.
"அந்தக் கல் பெரிய மலையாகி
பூமியை நிரப்பிற்று."



ராஜா மிகவும் ஆச்சரியப்பட்டான். அவன் சொப்பனத்திலே கண்டதும் சரியாக அதேதான்! அது தானியேலுக்கு எப்படித் தெரியும்? தேவன் தானியேலுக்கு சொன்னதினால் மாத்திரமே. அதன் பின்பு தானியேல் நேபுகாத்நேச்சார் ராஜாவுக்கு சொப்பனத்தின் அர்த்தத்தை சொன்னான்.



"பரலோகத்தின் தேவன்
உமக்கு ராஜ்ஜியத்தையும்,
வல்லமையையும்,
பெலத்தையும் மற்றும்
மகிமையையும்



கொடுத்திருக்கிறார்."
என்று தானியேல்
சொன்னான்.
"நீர்தான் அந்த
தலையாகிய பொன்."

உம்முடைய பொற்கல ராஜ்ஜியம் முடிவுபெறுமென தானியேல் ராஜாவினிடத்தில் சொன்னான்.



சிலையின் வெள்ளிப் பாகம் சொல்வது என்னவென்றால் பலவீனமான ஒரு ராஜ்ஜியம் அதின் இடத்தை எடுத்துக்கொள்ளும்.



ராஜ்ஜியம் 1

ராஜ்ஜியம் 2

ராஜ்ஜியம் 3

ராஜ்ஜியம் 4

வெண்கலம் என்பது
இன்னோரு
ராஜ்ஜியத்தை
குறிக்கிறது.
மற்றும் இரும்பும்,
களிமண்ணும்
நான்காவது
ராஜ்ஜியத்தை
குறிக்கிறது.



கடைசியாக தானியேல் ராஜாவினிடத்தில் சொன்னது இதுதான். "பரலோகத்தின் தேவன் ஏற்படுத்தபோகிற ராஜ்ஜியமானது என்றென்றைக்கும் அழிந்துபோவதில்லை."



தேவன் மாத்திரமே தானியேலுக்கு சொப்பனத்தை அறிந்து கொள்வதற்கும், அதை விளக்குவதற்கும் உரிய ஞானத்தை கொடுக்கமுடியுமென ராஜா கண்டுகொண்டான். நேபுகாத்நேச்சார் தானியேலுக்கு ஐஸ்வரியத்தை வெகுமானமாக கொடுத்து, ராஜ்ஜியத்தின் மிக முக்கியமான நபராக மாற்றினான்.





ராஜ்ஜியங்கள்
1, 2,
மற்றும்
3 வந்து
போய்விட்டன.

தேவனுடைய
ராஜ்ஜியம்
4 வது
ராஜ்ஜியத்திற்குபின்
வரப்போகிறது.

மேசியா
இந்த
உலகத்தை
ஆட்சி
செய்வார்.
அது
வெகு
சீக்கிரமாக
இருக்கும்.



தானியேலும் இரகசிய சொப்பனமும்

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

தானியேல் 2

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16